# பொருநராற்றுப்படையில் புரவலர்கள்

6

**முனைவர் க.சுஜாதா**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02**
santeepkishre@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :**

ஆற்றுப்படையில் இடம் பெற்ற புரவலராக கரிகாற்சோழன், தொண்டைமான் இளந்திரையன், நல்லியக்கோடன், நன்னன் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ள முடிகின்றது. அரசர்களின் நாட்டுவளம், கொடைச்சிறப்பு, ஆட்சி சிறப்பு, நீதி வழங்கும் முறை, பரிசு வழங்கிய செய்திகள்ஆகியனவும், இரவலரான பொருநர், பாணர், கூத்தர், பாடினி, விறலி பற்றியும் அவர்களின் வாழ்க்கை முறை பற்றியும் ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

கோ- அரசன், கையுறை –பரிசு, ஈதல் –கொடை, ஆற்றுப்படுத்துதல் –வழிப்படுத்துதல், மதி நிலவு

**முன்னுரை**

ஆற்றுப்படை நூல்களில் புரவலருக்கும் இரவலருக்கும் இடையே ஏற்பட்ட உறவு நிலை போற்றுதற்குரியதாகும். முன் பின் அறியாத பொருநர் சுற்றத்தை கரிகாலன் பார்த்து அவர்களை இன்முகம் காட்டி வரவேற்று விருந்து உபசரித்த செய்தி கேட்போரை மகிழ்விக்குமாறு அமைந்துள்ளது.

புரவலராக விளங்கிய மன்னர்கள் எளிய வாழ்வு வாழ்ந்த இரவலர்களை தங்கள் அரண்மனையில் அரசர்களுடன் அமர வைத்து மகிழ்வித்த செய்தியை அறிய முடிகின்றது.

நாடாண்ட அரசர்களும் தங்களை மகிழ்வித்த இரவலர் கூட்டத்தை ஆதரித்து அவர்கள் கூறிய நல்ல செய்திகளை ஏற்று வாழ்ந்ததை ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**பொருநராற்றுப்படையில் புரவலர்கள்**:

பொருநராற்றுப்படையில் கரிகாற் பெருவளத்தான் புரவலராக இடம் பெற்றுள்ளான். கரிகாலன் உலகை ஒரு குடையின் கீழ் ஆண்டவன். காவிரியின் குறுக்கே கல்லணை அமைத்து வான் பொய்ப்பினும் தான் பொய்யா வற்றாத காவிரியைக் கொண்டு சோழ நாட்டை வளமாக்கியவன்.

அறநூல்களின் படி ஆட்சி புரிந்தவன். வெண்ணி என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் சேரனையும், பாண்டியனையும் ஒரு சேர வென்றவன்.

“ஒரு குடையான் ஒன்று கூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்
அன்னோன் வாழி வெல்வேற் குரிசில்”1

என்ற வரிகளின் மூலம் அரசனின் மாட்சிமையையும் அவன் குடிமக்கள் கொண்ட பற்றினையும் அறிய முடிகின்றது.

இருமுதியவர்கள் கரிகாலன் இளைஞன் என்பதை அறிந்து தங்கள் பிரச்சனையை எவ்வாறு தீர்ப்பான் என அஞ்சினர். பின் அரசனே தெளிவாக விசாரித்து முறையான தீர்ப்பை வழங்கினான். பின் அரசனின் உத்தரவை மறுத்தால் தண்டனை என்பதால் இரு முதியவரும் அரசனின் தீர்ப்பை ஏற்பதாகக் கூறினர் என்பதை பழமொழி மூலம்,

“குலவிச்சை கல்லாமல் பாகம்படும்”2

என்ற பழமொழி மூலம் அறிய முடிகின்றது.

அரசன் தொழிலை கரிகாலன் தெளிவாக மேற்க்கொண்ட செய்தியை மேலும்,

“இளையோர் வண்டல் அயரவும் முதியோர்
அவைபுகு பொழுதின்தம் பகைமுரண் செலவும்”3

என்று பொருநர் ஆற்றுப்படை எடுத்துரைக்கின்றது.

கரிகாலன் புகழ்பாடும் ஆற்றுப்படை நூல் பொருநராற்றுப்படையாகும். இதில் இடம் பெறும் பொருநர் என்பவர் தடாரி என்னும் இசைக்கருவி கொட்டிப்பாடும் இசைவாணராவார். அவருள் ஒருவன் தன் வறுமையைப் போக்க விழைந்து கரிகாலன் அரண்மனையை அடைந்தான். பின்பு தனது தடாரியைக் கொட்டிக் கரிகாலனை வாழ்த்தினான். அவ்வளவில் கரிகாலன் அவன் முன் தோன்றினான். முன்னரே தன்னோடு பழகிய நண்பனை வரவேற்பது போல பொருநனை வரவேற்றான். உபச்சார மொழிகளைக் கூறினான். தனக்குச் சிறிது தொலைவில் அவனை இருக்கச் செய்தான். அவனை அருள் உணர்ச்சியோடு ஈரும் பேனும் குடியிருந்து அரசாண்ட பொருநனது கந்தலாடையை அகற்றினான். இழை போன வழி இது என்று கண்டறிய இயலாத நுண்ணிய நூலால் நெய்யப்பட்ட பூத்தொழில் அமைந்த ஆடையைக் கொடுத்து உடுக்கச் செய்தான்.அவ்வளவில் பாட்டாலும், கூத்தாலும், சொல்லாலும் அரசனை மகிழ்விக்கும் பொருநனின் களைப்பை நீக்கத்தக்கும் வகையில் பணிப்பெண்டிர் மதுவை பொன் வட்டிலில் வார்த்துக் கொடுத்துக் குடிக்கச் செய்தனர்.

பின்பு பொருநன் உறங்கி கண்விழித்ததும், வறுத்த ஆட்டிறைச்சித் துண்டங்களும், சுட்ட இறைச்சித் துண்டங்களும், முல்லை அரும்பினை ஒத்த அரிசிச்சோறும் படைக்கப்பட்டன. அதனுடன் பொரிக்கறிகளும் படைக்கப்பட்டன.

கரிகாலன் உடனிருந்து இவற்றையெல்லாம் உண்ணும் படி பொருநனை உபசரித்தான். இங்ஙனம் நாள்கள் சில கழிந்தன. ஒரு நாள் அப்பொருநன் தனது ஊர் செல்ல விடை கேட்டான். அவ்வளவில் கரிகாலன் எனது கூட்டத்தை விட்டுப்போக விரும்புகின்றாயோ? என்று சினந்தவன் போலச் சொல்லிக் களிற்றோடு கன்றையும் பிடியையும் பொருநனுக்கு வழங்கினான். பொற்றாமரை மலரையும் வழங்கினான். பின் ஏழடி நடந்து சென்று இக்கலைஞர்களை வழியனுப்பினான். இத்தகைய உயரிய பண்பினைப் பெற்றவன் தான் கரிகால் பெருவளத்தான். இவனது புகழையும், கொடைத்திறனையும் முடத்தாமக்கண்ணியார் 248 பாடல் வரிகளில் புகழ்ந்து பொருநராற்றுப்படையைப் பாடியுள்ளார்.

**பொருநராற்றுப்படையில் இரவலர்(கலைஞர்) காடுறை தெய்வத்தை வணங்கி பயணம் செல்லல்:**

பொருநன் நாள்தோறும் யானைகள் நடந்து திரியும் காட்டு வழித்தடத்தில் நீர்நிலைகள் இருக்கும் என்ற நம்பிக்கையில் காடுறை தெய்வமான காளிக்கு பலிக்கடன் செலுத்தினான். பின் பாடினி பாடிய தாளத்திற்குப் பொருந்துமாறு பாடலினைப் பாடி காட்டு வழியே சென்றனர் என்பதை,

"பாடினி பாணிக்கு ஏற்ப நாள்தொறும்
களிறு வழங்கு அதர்க் கானத்து அல்கி"4

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

**பரிசு பெற்ற பொருநன் பரிசு பெறச் செல்வோனை ஆற்றுப்படுத்துதல்:**

மிகுந்த செல்வத்தினையும் பெருமையையும் உடைய முரசுகள் முழங்குகின்ற சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் ஒற்றுமையுடன் இருந்தது போன்ற காட்சியை உடையதாக பொருநரின் பயணம் அமைந்திருந்தது.

பரிசு பெற்று வந்த பொருநன் எதிர் வரும் பொருநனைப் பார்த்து கூத்தர்களின் தலைவனே! பின் வரக் கூடியதை முன் அறிபவனே! நீங்கள் உங்கள் அறியாமை காரணமாக வழி அறியாது பிறபக்கம் செல்லாது நான் வந்த வழியில் எதிரே வந்தது நீங்கள் செய்த தவத்தின் பயனாகும். நான் கூறுவதை அமைதியாக கேளுங்கள் உங்களின் வறுமைத் துயர் போகும் என்பதை,

**"பீடுகெழு திருவின் பெரும்பெயர், நோன்தாள்
முரசு முழங்குதானை மூவரும் கூடி"5**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

வழி எதிர்ப்பட்ட பொருநரிடம் நின் சுற்றத்துடன் பழங்காலம் தொட்டுப் பொருந்திவரும் பசியானது நீங்க வேண்டுமென்றால் காலம் தாழ்த்தாமல் ஏழிசை வள்ளுவனான கரிகாலனிடம் செல் எனக்கூறியதை,

"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின், நீடுஇன்று
எழுமதி வாழி ஏழின் கிழவ"6

என்ற பாலின் மூலம் அறியலாம்.

பசியின் கொடுமையினை மணிமேகலைக் கீழ்க்கண்டவாறு உணர்த்துகின்றது.

"பசிப்பிணி என்னும் பாவி"7

இதன் மூலம் பசியின் கொடுமையினை அறியலாம்

**பரிசு பெற்றோன் பாடிய முறை:**

பழுத்த பழங்களை உடைய மரத்தைத் தேடிச் செல்லும் பறவைகள் போன்று நானும் கரிகால் பெருவளத்தானைத் தேடிச் சென்றேன். கரிகாலன் அரண்மனைக்கு போவோர், வருவோர் மிகுதியாக இருப்பதால், எப்போதும் ஓசை உடையதாக அரண்மனை இருந்தது. இவ்வரசனின் அரண்மனை இரவலர்களுக்காக எப்போதும் அடைக்கப்படாத வாசலை உடையதாக அமைந்திருந்தது. என் துன்பம் நீங்க நானும் அங்கு சென்றேன்.

அதிகாலையில் நட்சத்திரங்கள் முளைத்திருந்த இன்னும் விடியாத காலத்திலே தடாரிப்பறையை இயக்கி பாடலைப் பாடினேன். அப்பொழுதும் கூட இன்னும் பல இரவலர்களும் அவ்வரண்மனைக்கு வந்து சேர்ந்தனர்.

"பழுமரம் உள்ளிய பறவையின் யானும் அவன்
இழுமென் சும்மை இடனுடைய வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்"8

என்ற பாடல் வரிகளுக்கேற்ப பரிசு தரும் அரசனை நோக்கி மக்களின் பயணம் அமைந்திருந்தது.

"பழுமரம் தேரும் பறவை போல"9
"பழந்தேர் வாழ்க்கை பறவை போல"10
"பழுமரத் தீண்டிய பறவையின் எழும்"11

என்ற பாடல் வரியின் மூலம் அறிய முடிகின்றது.

அக்காலப் பொருநர்கள் விடியற் காலத்திலே சென்று உடுக்கை இசைத்துப் பாடுதலும், வள்ளல்கள் அவர்களுக்குப் பரிசில் வழங்குவதும் பண்டைக்கால வழக்கமாகும் என்பதை,

"வெள்ளி முளைத்த விடியல் வயல்யாமை
அள்ள கட்டன்ன அரிக்கினை – வள்ளியோன்
முன்கடை தட்டிப் பகடுவாழ்க என்னாமுன்
என்கடை நீங்கிற்று இடர்"12

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

**கரிகாலன் இரவலனுக்கு அளித்த விருந்து:**

கரிகாலன் முன்பே எங்களைப் பார்த்து நட்புடன் பழகியவன் போல இன்முகம் காட்டி எங்களுக்கு விருந்தளித்தான். மேலும் எங்களுடன் முக மலர்ச்சியுடன் பழகி எங்கள் விருப்பம், தேவையறிந்து உணவளித்தான். மற்றும் அரசன் எங்களைப் பார்த்த பார்வையானது எங்கள் உடம்பு முழுவதும் புல்லரிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது என்பதை,

"கேளிர்போலக் கேள்கொளல் வேண்டி
வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
……………………………………..
உருகு பவைபோல் என்பு குளிர்கொளீஇ"13

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

**பொருநருக்கு புத்தாடை அணிவித்தல்**:

பொருநர் கூட்டமாகிய நாங்கள் உடுத்தியிருந்த ஆடை வேர்வையால் நனைந்து கந்தலாகி கிழிசலைத் தைத்திருந்த இடங்கள் வெளியே தெரிந்த அழுக்கான ஈரும் பேனும் இருந்த ஆடையை அகற்றிய அரசன் எங்களுக்கு புத்தாடை அணிவித்தான்.

அரசன் கொடுத்த விலை மதிப்பற்ற ஆடைகள் பாம்பின் தோலை விட மெல்லியதாக இருந்தது. அவ்வாடையின் மேல் அழகிய பூக்கள் வரையப்பட்டு காண்போருக்கு மகிழ்வூட்டும் வகையில் அமைந்திருந்தது என்பதை,

“ஈரும் பேனும் இருந்து இறைகூடி
வேரொடு நனைந்து, வேற்று இழை நுழைந்த
துன்னங் சிதாஅர் துவர நீக்கி”14

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

**பொருநருக்கு உணவு பரிமாறுதல்:**

பொருநர்க்கு சிறந்த யாழை இயக்கினர். விறலியரை இசைபாடச் செய்து, ஆடச்செய்து மகிழ்ச்சி அடையச் செய்தனர். அப்பொழுது அவர்கள் எங்களுக்கு சுவையான பல்வகை புதிய உணவு வகைகளைப் பரிமாறினர் என்பதை,

“இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்”15

என்ற அடி விளக்குவதாக அமைந்துள்ளது.

பல்வகை இசைக்கருவிகளை இயக்கி பாடிக் கொண்டு பல நாள் கழிந்த பிறகும், அரசனின் விருந்தளிப்பு தலைநாள் போலவே இருந்தது என்ற செய்தியினை புறநானூறும் குறிப்பிட்டுள்ளது.

“ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியதேர்”16

அதியமான் இரவலருக்கு தலைநாள் போல விருந்தளித்தான்.

இவ்வாறே, ஒருநாள் அரிசி உணவு உண்க என்று கூறி, வளமான அரிசியால் சதை;த விரல் போன்ற சோற்றையும், பொரிக்கப்பட்ட பொரிக்கறியும் பரிமாறப்பட்டது. அவற்றை உண்ண வயிற்றில் இடமில்லாத காரணத்தால் கழுத்து வரை உண்டோம். இவ்வாறு இறைச்சி, பண்ணியாரங்கள், அரிசிசோறு இவற்றை எல்லாம் மாற்றி மாற்றி உண்டு பற்கள் எல்லாம் கொல்லையை உழுத கலப்பையின் கொழுவைப் போன்று மழுங்கி விட்டது என்பதை,

“அவிழ்பதம் கொள்க ஒரு நாள் என்று இரப்ப, முகிழ்த்தகை
…………………………………………………………….
அயின்ற காலை பயின்று இனிது இருந்து
கொல்லைஉழு கொழு ஏற்ப பல்லே”17

என்ற பாடல் வரியின் மூலம் அறிய முடிகின்றது.

**பொருநர் ஊர் செல்ல விரும்புவதைக் கூறுதல்:**

கரிகாலன் அரண்மனையில் நுழையும் போது பல நாள் உணவுகள் இல்லாத வறுமை நிலையில் வந்து சேர்ந்த களைப்பு நீங்கி வளமான வாழ்வு வாழும் நிலை எங்களுக்கு ஏற்பட்டது.

இவ்வாறு பலவகை உணவுகளையும் உண்டு மகிழ்ந்திருந்த நாங்கள், எங்கள் ஊருக்கு செல்ல அனுமதி தர வேண்டும் என அரசனிடம் கூறினோம் என்பதை,

, "செல்வ சேறும் எம்தொல்பதிப் பெயர்ந்து என
மெல்எனக் கிளந்தனம் ஆக"18

என்ற பாடல் வரிகளால் அறிய முடிகின்றது.

பொருநருக்கு பல்வகைப் பரிசளித்தல்:

"……………………….வல்லே
அகறிரோ எம் ஆயம்விட்டு? என
சிரறியவன் போல் செயித்த நோக்கமொடு
துடிஅடி அன்ன தூங்கநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க என
…………………………………………
இன்மைதீர வந்தனென்"19

அரசன், நீங்கள் என்னை விட்டு விரைவாக அகன்று ஊர் செல்ல விரும்புகின்றீர்களோ என்று சினந்தவன் போன்று எங்களை நோக்கினான். பின் எங்களுக்கு, யானைக் கன்றுகளையும், ஆண், பெண் யானைகளையும் பல்வகைப் பரிசில் பொருள்களையும் வழங்கினான். நாங்கள் எங்கள் குறைகள் நீங்கும் அளவில் பரிசுப் பொருட்களை எடுத்துக்கொண்டு வறுமை தீர வந்து சேர்ந்தோம் என்று கூறினான் வழிகாட்டுகின்ற பொருநன். மேற்கண்டவாறு வறிய நிலையில் வாடித் திரிந்த பொருநனை கரிகாலனிடம் சென்றால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள வறுமை நோய் நீங்கும் என வழிகாட்டும் பொருநர், வழி எதிர்ப்பட்ட பொருநனுக்கு எடுத்துக் கூறினான்.

**தொகுப்புரை:**

¬ ஆற்றுப்படையின் புரவலரும், இரவலரும் என்ற இவ்வியலில் அரசர்களின் கொடைத்திறனும், இரவலர்களின் பரிசில் வேட்கையும் தொகுக்கப்பட்டுள்ளது.இரவலரான பொருநர், பாணர், கூத்தர், பாடினி, விறலி போன்றோர் எல்லாம் பரிசு பெற்ற பின் தன் வழி எதிர்பட்ட கலைஞர்களை மேற்குறிப்பிட்ட வள்ளல்களின் அரண்மனைக்குச் சென்றால் உங்களுக்கும் ஏற்பட்டுள்ள வறுமைத் துயர் நீங்கும் என ஆற்றுப்படுத்திய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன.

¬ ஆற்றுப்படை நூல்களின் புரவலராகக் குறிப்பிடப்படுபவர்கள் அரசர்களாவர். பொருநராற்றுப்படையில் புரவலராக கரிகால்வளவனும், சிறுபாணாற்றுப்படையில் புரவலராக நல்லியக்கோடனும் பெரும்பாணாற்றுப்படையில் புரவலராக தொண்டைமான் இளந்திரையனும், கூத்தராற்றுப்படையில் புரவலராக நன்னனும் இருந்து பரிசு வழங்கிய செய்தி தொகுக்கப்பட்டுள்ளது. ஆற்றுப்படையில் பொருநர், சிறுபாணர், பெரும்பாணர், கூத்தர், பாடினி, விறலி போன்றோர் இருந்தனர் என்ற செய்தி ஆராயப்பட்டுள்ளது.

¬ புரவலர்கள் இரவலருக்கு முதலில் பசியாற உணவு வழங்கினர். பின்னர் இரவலருக்கு புத்தாடை அணிவித்து உடனிருந்து மகிழ்ந்தனர். இரவலருக்கு அரிசி முதல் யானை வரை பல வகை பரிசுப் பொருட்களை வழங்கிய செய்தி ஆராயப்பட்டுள்ளது. இரவலர்கள் பரிசு பெறும் முன் வறிய நிலையில் வாழ்ந்தனர். அவர்கள் பரிசு பெற்ற பின் வளமான வாழ்வு வாழ்ந்த செய்தி

அறியப்படுகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. இளங்கோ.நா. பொருநராற்றுப்படை, பா.வ.228-231, ப.77
2. மாணிக்கவாசகன்.ஞா(உ.ஆ) பழமொழி நானூறு-7, ப.17.
3. இளங்கோ.நா (உ.ஆ) பொருநராற்றுப்படை, பா.வ.187-88, ப.73.
4. இளங்கோ.நா (உ.ஆ) பொருநராற்றுப்படை, பா.வ.48-49, ப.42.
5. மேலது, 53-54, ப.42.
6. மேலது, பா.வ61-63, ப.59.
7. தண்டபாணி, துரை மணிமேகலை (உ.ஆ) பா.வ.79, ப.90.
8. இளங்கோ.நா (உ.ஆ) பொருநராற்றுப்படை, பா.வ.64-66, ப.42.
9. சுப்பிரமணியன்.ச.வே (உ.ஆ) பெரும்பாணாற்றுப்படை, பா.எ.20, ப.55.
10. மாணிக்கம்.அ, மதுரைக்காஞ்சி (உ.ஆ) பத்துப்பாட்டு தொகுதி – 2, பா.வ.576, ப.25.
11. தண்டபாணி துரை(உ.ஆ), மணிமேகலை, பா.வ.14-24, ப.110.
12. ஔவை.சு.துரைச்சாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, பா.எ.206.
13. இளங்கோ.நா (உ.ஆ) பொருநராற்றுப்படை, பா.வ.74-78, ப.61.
14. மேலது, பா.வ.79-81, ப.61.
15. மேலது, பா.வ.85, ப.61.
16. ஔவை.சு.துரைச்சாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, பா.எ.101-1-4, பக்.298-99.
17. இளங்கோ.நா (உ.ஆ) பொருநராற்றுப்படை, பா.வ.111-116, ப.65.
18. மேலது, பா.வ.121-122, ப.66.
19. மேலது, பா.வ.123-129, ப.67

**பார்வை நூல்கள்**

1. **இளங்கோ.நா (உ.ஆ) - பொருநர் ஆற்றுப்படை,**
**கங்கை புத்தக நிலையம்,**
**சென்னை.**
**முதற்பதிப்பு** – 2010.